# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS.No.68/2019

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | சதானந்தபதி | ஊர் | : | குருங்குளம் |
| க.பெ/ த.பெ. | : | **கோவிந்தராஜ்** | மாவட்டம் | : | |
| வயது | : | 46 | தொழில் | : | கூலி |

2025ம் ஆண்டு ஜுலை திங்கள் 1-ஆம் நாள் **பி.சா.1ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.பி.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் இவ்வழக்கில் 2ஆம் பிரதிவாதி முதல் பிரதிவாதி என்னுடைய கணவர். அவருக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். வாதி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அது **பி.வா.சா.ஆ.1** ஆகும். அந்த அறிவிப்பை என் கணவர் பெற்ற அஞ்சல் உரை தாக்கல் செய்கிறேன் அது **பி.வா.சா.ஆ.2** ஆகும். நான் பெற்ற அஞ்சல் உரை தாக்கல் செய்கிறேன் அது **பி.வா.சா.ஆ.3** ஆகும். நான் அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.வா.சா.ஆ.4** ஆகும். அது அனுப்பபட்டதை மற்றும் பெறபட்டதை காண்பிக்ககூடிய அஞ்சல் ரசீது மற்றும் ஒப்புகை அட்டை தாக்கல் செய்கிறேன் அது **பி.வா.சா.ஆ.5 , 6** ஆகும். எனது மகள் காவ்யாவின் பள்ளி மாற்று சான்று அசல் தாக்கல் செய்கிறேன் அது **பி.வா.சா.ஆ.7** ஆகும். எனது மகன் விஜய் சர்மாவின் பள்ளி மாற்று சான்று அசல் தாக்கல் செய்கிறேன் அது **பி.வா.சா.ஆ.8** ஆகும். 22.06.2017 தேதியிட்ட பரமேஸ்வரி என்பவர் எனக்கு எழுதிகொடுத்த கிரய பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.வா.சா.ஆ.9** ஆகும். அதன் அசல் RBL வங்கியில் உள்ளது. நானும் எனது கணவரும் RBL வங்கிக்கு

எழுதி கொடுத்த ஆவணங்கள் ஒப்படைப்பு பத்திரம் சான்று நகல் தாக்கல் செய்கிறேன்**பி.வா.சா.ஆ.10** ஆகும். தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

வாதி தரப்பு குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோள்படி ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப ,நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**